**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்.**

# CC. No. 25/2020

**2021-ம்** ஆண்டு **ஜனவரி** மாதம் **11**-ம் நாள் குற்றமுறையீட்டாளர் / எதிரி தரப்பில் சாட்சி **அ.சா. 16** ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | லதா | வயது | |
| தகப்பனார் பெயர் | தண்டாயுதபாணி | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் கும்பகோணத்தில் காமராஜர் ரோடு, மதுரம் நகரில் வசித்து வந்து வீட்டு குடித்தனமாக இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் சக்திவேல் மற்றும் கோவிந்தலெட்சுமியை தெரியும். கடந்த 2018 ம் வருடம் ஜனவரி மாதத்தில் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் எதிரி கோவிந்தலெட்சுமியிடம் வேலைக்காக பணம் கொடுத்தேன். எதிரி கோவிந்தலெட்சுமி என்னிடம் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாககூறி பணம் கேட்டார். நான் என் மகனுக்கு வேலை வாங்குவதற்காக அவரிடம் பணம் கொடுத்தேன். என் மகன் பி-ஈ. வரை படித்துள்ளார். கும்பகோணத்தில் கோர்ட் ஓப்பன் பண்ணுவதாகவும், சிஸ்டத்தில் வேலை இருப்பதாகவும் கூறி மேற்படி வேலைக்கு ரூ.2 லட்சம் தேவைப்படும் என்றும் முன்பணமாக ஒரு லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் கூறினார். வேலை கிடைத்தவுடன் மீத ஒரு லட்சத்தை தர வேண்டும் என்றார். அதனால் நான் முன்பணமாக ரூ.1 லட்சம் கொடுத்தேன். நான் பணம் கொடுத்ததும் கோவிந்தலெட்சுமியிடம் வேலை பற்றி கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் ஏப்ரல் மாதத்தில் அம்மாவிடமிருந்து ஆர்டர் வந்துவிடும் என்று கூறினார். ஆனால் வரவில்லை. அதனால் மீண்டும் கேட்டேன். 2018 ம் வருடத்தில் ஜுன், ஜூலை மாதத்தில் ஆர்டர் வந்துவிடும் என்று சொன்னார். ஜுன், ஜூலை மாதத்தில் வராததால் நான் மீண்டும் கேட்டபோது நீதிமன்றம் விடுமுறையில் உள்ளதாகவும், உத்தரவு வந்துவிடும் என்றும் சொன்னார். ஆனால் அவர் சொன்னபடி வேலை கிடைக்கவில்லை. எதிரி கோவிந்தலெட்சுமி சக்திவேல் வீட்டில் குடியிருந்து வந்தார். சக்திவேல் எனக்கு உறவினர் ஆவார். அதனால் சக்திவேலிடம் வேலை கிடைக்காதது பற்றி கூறினேன். அப்போது சக்திவேல் கோவிந்தலெட்சுமியிடமிருந்து சரியான பதில் எதுவும் வரவில்லை என்றும், அதனால் கோர்ட்டில் கேஸ் போட்டிருப்பதாகவும் சொன்னார். இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**கு.வி. ( 1 வது எதிரிகள் தரப்பில்)**

எதிரி ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை என்பதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

**கு.வி. (2 வது எதிரிகள் தரப்பில்)**

போலிசார் விசாரித்தபோது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் 2018 ம் வருடத்தில் ஜனவரி மாதத்தில் வேலைக்காக பணம் கொடுத்தேன் என்றும் அவர் கும்பகோணத்தில் கோர்ட் ஓப்பன் செய்யப்போவதாக சொல்லி சிஸ்டத்தில் வேலை இருப்பதாக சொன்னார் என்ற விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அதேபோல ஜுன், ஜூலை மாதத்தில் கோவிந்தலெட்சுமியிடம் வேலை பற்றி கேட்டதாகவும், அதன்பிறகு சக்திவேலிடம் இந்த விபரத்தை சொன்னதாகவும் அவர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருப்பதாக சொன்ன விபரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சக்திவேல் எனக்கு ஒன்றுவிட்ட கொழுந்தனார் முறை என்றால் சரிதான். என் நாத்தனார் மகள் நந்தினி என்றால் சரிதான். சண்முகசுந்தரம் என்பவர் எனக்கு தம்பி முறை என்றால் சரிதான். எனக்கு வினோத், சிவகுமார், பவித்ரா, விஜய், அரவிந்தகுமார், காயத்திரி ஆகியோரை தெரியும் என்றால் தெரியும். நான் சக்திவேல், சண்முகசுந்தரம், நந்தினி ஆகியோர் ஒன்றுசேர்ந்து வினோத், சிவக்குமார், பவித்ரா, விஜய், அரவிந்தகுமார், காயத்திரி ஆகியோர்களிடம் ரூ.6 லட்சம் பணம் கேட்டு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. எங்களிடம் பணம் கொடுத்த நபர்கள் எங்கள் மீது நடவடிக்கை எடுத்துவிடுவார்கள் என்று பயந்து கோவிந்தலெட்சுமியை மிரட்டி பணம் பெறலாம் என்ற எண்ணத்தில் சக்திவேல் சொல்லிக்கொடுத்ததின்பேரில் போலிஸ் விசாரணையில் சொன்ன விபரங்களுக்கு மாறுபட்டு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் சக்திவேலிடம் ரூ.1 லட்சம் கொடுத்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை., கோவிந்தலெட்சுமியிடம் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். அதேபோல சக்திவேலிடம் மீண்டும் சென்று கேட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கோவிந்தலெட்சுமியிடம் கேட்டதாக சொன்னேன். போலிசார் விசாரணையில் பணம் கொடுப்பதற்கு முன்பு வரையில் கோவிந்தலெட்சுமியை யார் என்றே தெரியாது என்றும், எதிரி சக்திவேல்தான் கோவிந்தலெட்சுமி என்று அவரை அறிமுகம் செய்தார் என்றும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. கோவிந்தலெட்சுமியிடம் பணம் கொடுத்ததிற்கு ஏதாவது எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. என் மகன் பி.ஈ. முடித்ததாகவும் அவருக்கு வேலை வேண்டி பணம் கொடுத்ததாகவும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதன்பேரிலும் 1வது எதிரி கேட்டுக்கொண்டதன்பேரிலும்

முதன்முதலாக கோவிந்தலெட்சுமியை நீதிமன்றத்தில் அடையாளம் கண்டுக்கொண்டு முன்பே தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் கோவிந்தலெட்சுமியை என்னிடம் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாக சொன்னதன்பேரில்தான் நான் மற்றவர்களை கோவிந்தலெட்சுமியிடம் அறிமுகம் செய்து வைத்தேன். மேற்படி விபரத்தை சக்திவேல் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதன்முதலாக நீதிமன்றத்தில் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எந்த காலத்திலும், கோவிந்தலெட்சுமி சக்திவேல் வீட்டில் குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. கோவிந்தலெட்சுமி எதிரி சக்திவேல் வீட்டில்தான் குடியிருந்து வந்தார். கோவிந்தலெட்சுமி சக்திவேல் வீட்டில் குடியிருந்ததாக வழக்கிற்காக முதன்முதலாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்.**

CC. No. 25/2020

**2021-ம்** ஆண்டு **ஜனவரி** மாதம் **11**-ம் நாள் குற்றமுறையீட்டாளர் / எதிரி தரப்பில் சாட்சி **அ.சா. 17** ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சண்முகசுந்தரம் | வயது | |
| தகப்பனார் பெயர் | தண்டாயுதபாணி | ஜாதி | |
| தொழில் | | மதம் | |
| ஊர் | | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் கும்பகோணம், நெசவாளர் காலனியில் வசித்து வந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ஆவூர் கிளையில் தற்காலிக நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளில் 1வது எதிரி சக்திவேலை தெரியும். கடந்த 2018ம் வருடத்தில் என் அக்கா லதா அவரது உறவினரான திருவாரூரை சேர்ந்த ஆஜர் எதிரி சக்திவேல் அவர் வீட்டில் குடியிருக்கும் கோவிந்தலெட்சுமி என்பவரிடம் பணம் கொடுத்து திருவாரூர், மன்னார்குடி, கும்பகோணம், சென்னை ஆகிய இடங்களில் நீதிமன்றத்தில் வேலை இருப்பதாகவும், அதை வாங்கி தருவதாகவும் கூறினார். அதனால் எனது அக்கா என்னிடம் மேற்படி வேலைக்காக ரூ.2 லட்சம் ஆகும் என்றும், முன்பணமாக ரூ.1லட்சம் கொடுக்க வேண்டும் என்றும் வேலை கிடைத்தவுடன் மீதம் ஒரு லட்சத்தை கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். நான் அதன்பிறகு என் அக்கா லதா சக்திவேலிடம் பணம் கொடுத்த பிறகு என்னிடம் வேலை பற்றிய விபரத்தை கூறினார். அதன்பிறகு நான் பணம் கொடுத்தேன். அதன் பிறகு திருவாரூரில் உள்ள சக்திவேல் வீட்டிற்கு சென்று ரூ.1 லட்சம் பணம் கொடுத்தேன். அப்போது சக்திவேல் என்னிடம் வேலை கிடைத்துவிடும் என்று என்னிடம் கூறினார். நான் பணம் கொடுக்கும்போது வேலை வாங்கி தருவதாக சொன்ன கோவிந்தலெட்சுமியை பற்றி கேட்டேன். அப்போது எதிரி சக்திவேல் கோவிந்தலெட்சுமி வேலைக்கு சென்றிருப்பதாகவும், அடுத்தமுறை வரும்போது பார்க்கலாம் என்று சொன்னார். நான் பணம் கொடுத்ததிலிருந்து 15, 20 நாட்களில் சக்திவேலிடம் போன் செய்து வேலை பற்றி கேட்டேன். அப்போது சக்திவேல் என்னிடம் கோவிந்தலெட்சுமி அருகில் இருப்பதாகவும் அவரிடம் பேசுமாறும் சொன்னார். அப்போது என்னிடம் பேசிய கோவிந்தலெட்சுமி லதாவும் உன் அக்காதானே அவரும் என்னிடம் பணம் கொடுத்துள்ளார். வேலை கண்டிப்பாக கிடைத்துவிடும் என்று சொன்னார். ஆனால் வேலை கிடைக்கவில்லை. அதனால் நான் சக்திவேலிடமும், என் அக்காவிடமும் கேட்டேன். வேலை கிடைக்காது என்றும்,

வேலைக்காக பணம் வாங்கி ஏமாற்றி விட்டார்கள் என்றும் அதனால் வழக்கு கொடுத்திருப்பதாகவும் சக்திவேலும், என் அக்காவும் என்னிடம் சொன்னார்கள். இது சம்பந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

**கு.வி. (1 வது எதிரிகள் தரப்பில்)**

எதிரி ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை என்பதால் குறுக்குவிசாரணை முடிக்கப்படுகிறது.

**கு.வி. ( 2 வது எதிரி தரப்பில் )**

எதிரி சக்திவேலிடம் பணம் கொடுத்தபோது கோவிந்தலெட்சமி பற்றி நான் கேட்டதாகவும், அவர் வேலைக்கு சென்றுவிட்டார் மறுமுறை வரும்போது பார்க்கலாம் என்று சக்திவேல் சொன்னதாகவும் சொன்ன விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் போலிசார் அவ்வாறு எதுவும் கேட்கவில்லை என்பதால் சொல்லவில்லை. அதுபோல் நான் சக்திவேலிடம் பேசியபோது கோவிந்தலெட்சுமி உடன் இருப்பதாகவும் அதனால் சக்திவேல் போனில் கோவிந்தலெட்சுமியிடம் என்னை பேச சொன்னதாகவும், நான் கோவிந்தலெட்சுமியிடம் பேசியதாகவும் சொன்ன விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. என் அக்காவிடமும், சக்திவேலிடமும் கேட்டபோது பணம் வாங்கிக்கொண்டு ஏமாற்றி விட்டதால் நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருப்பதாக சொன்ன விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரி சக்திவேல் எனக்கு உறவினர் என்றால் சரிதான். எதிரி சக்திவேல் சொல்லிக்கொடுத்ததன்பேரில் 2 வது எதிரியை சம்பந்தப்படுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சக்திவேல், லதா, நந்தினி ஆகியோர் ஒன்றுசேர்ந்து வினோத், சிவக்குமார், பவித்ரா, விஜய், அரவிந்தகுமார், காயத்திரி ஆகியோர்களிடம் ரூ.6 லட்சம் பணம் கேட்டு நீதிமன்றத்தில் வேலை வாங்கி தருவதாக கூறி ஏமாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல.